என்கிற புகார் உள்ளது என்பதை அரசு அறியுமா ? அறியும் எனில், இவைகளைத் தவறாமல் வழங்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.15

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு விடுதிகளுக்கும் என்னென்ன உணவு வகைகள் வழங்கப்பட வேண்டுமென்று அட்டவணைகளிலே சரியாக எழுதப்பட்டிருக்கிறது. அந்த 'மெனு' படி தான் அந்த உணவு வழங்கப்படுகிறது. இதற்கு என்று, அந்த உணவுகள் சரியாக வழங்கப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு விடுதியிலும் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஹாஸ்டல் மானேஜ்மென்ட் கமிட்டியை அமைத்திருக்கிறார்கள். இந்தக் கமிட்டியிலே, கல்லூரி விடுதிகள் என்றால் அதிலே அந்த பிரின்சிபாலும் அல்லது வைஸ்-பிரின்சிபாலும் தலைவராக இருப்பார்கள். மாணவர் விடுதி என்றால் அதற்கு ஹெட்மாஸ்டரோ அல்லது ஏ.எச்.எம்.-மோ தலைவராக இருப்பார்கள். மேலும் பேரன்ட்-டீச்சர்ஸ் அசோசியேசன் சைடில் இருந்து 2 பேர் மெம்பர்ஸ் ஆகவும், டீச்சர்ஸ் சைடில் இருந்து 2 பேர் மெம்பர்ஸ் ஆகவும், வார்டன் மற்றும் மேட்ரன் கூட அந்த மெம்பர் மற்றும் கன்வீனர் ஆகவும் இருந்து இந்த ஹாஸ்டல் மானேஜ்மென்ட் கமிட்டி ஒவ்வொரு விடுதியிலேயும் இருந்து சிறப்பாக செயல்படுகின்றது. இதில் எந்தவிதப் பிரச்சினை என்றாலும் எங்களுடைய கவனத்திற்கு உறுப்பினர் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

103-

பேராவூரணி ஒன்றியம், கீழப்புனவாசலில் பகுதி நேர அங்காடி தொடங்குதல்

* 21159—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கீழப்புனவாசலில் பகுதி நேர அங்காடி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

விடை—

இல்லை.